1989 நவம்பர் 2] [டாக்டர் மு. கருணாநிதி]

10-55 மணி

நிதி உதவி தரவேண்டும் என்பது. நான் அவருடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு ஆரம்பமானதிலிருந்து, அந்தக் காலக் கணக்கை எடுத்துக் கொண்டு, அப்படி சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்பொழுதே மறைந்து விடுகின்றவர்களின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் இதைப் பெறுகின்றவர்களாக யாரும் இருக்கக் கூடாது என்றும் நான் வாழ்த்துகிறேன்.

(ஐ) முழுஅடைப்பு நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாகக் கைது செய்யப்பெற்ற ஒருவர் மரணமடைந்தது குறித்து.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியினை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் தேதி'' பாரத் பந்த்'' நடைபெற்றது. ஆகஸ்ட் 31 ஆம் தேதி காலை 6-00 மணிக்கு நியூ ஆம்பாடி தோட்டத்தில் வேலைக்காகச் சென்ற கோபி என்கின்ற 23 வயது இளைஞன் அன்று பிற்பகல் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். அருமனை காவல் நிலைய எல்லைக்குள் வைத்து கைது செய்யப்பட்ட அவர் அந்தக் காவல் நிலையத்தை விட்டு, திருவட்டார் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் மீது எந்தப் புகாரும் இல்லை. எந்த முதல் தகவல் அறிக்கையிலேயும் அவருடைய பெயர் இடம் பெறவில்லை. இருந்தும் அவரும், அவரோடு சேர்ந்து கைது செய்யப்பட்டவர்களும் திருவட்டார் காவல் நிலையத்திலே 2 தினங்கள் நீதி மன்றம் எதிலும் ஆஜர் செய்யப்படாமல் வைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் தாக்கப்பட்டதாகக் கூட சில செய்திகள் இருக்கின்றன. அப்படி கைது செய்யப்பட்ட அவர், செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதி தான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நினைவு இழந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் நினைவு திரும்பாமலேயே ஒரு சில நாட்களில் இறந்து விட்டார். அப்படி இறந்த சூழ்நிலையில் அங்குள்ள மக்கள், இப்படிப்பட்ட ஒரு இளைஞர், ஆரோக்கியமான நிலையில் கைது செய்யப்பட்டு மரணம் அடைந்ததைக் குறித்து மிகுந்த பீதி அடைந்து இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அவருடைய மரணம் சம்பந்தமாக அரசு ஒரு ஜுடிஷியல் என்கொயரி நடத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அநீதி எங்கு நடந்தாலும் அதை அகற்றி நீதியை நிலைநாட்டும் என்பதை நிரூபிக்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதுபோல, அவரை

இழந்து தவிக்கின்ற குடும்பம் இன்றைக்கு வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது ஒரு நிவாரண உதவியை அரசு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 30 ஆம் தேதி முழு அடைப்பு தொடர்பாக நடைபெற்ற ஒரு கலவரம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்களிலே ஒருவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் குறிப்பிடுகின்ற கோபி அவர்கள் ஆவார்கள். எனக்குத் தரப்பட்டுள்ள தகவல்களின்படி அவருக்கு ஏற்கெனவே சர்க்கரை வியாதி இருந்ததாகவும் அதன் காரணமாக சப்-ஜெயிலில் அவருக்கு நோய் ஏற்பட்டு சிகிச்சைக்காக குழித்துறைஅரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கிருந்து நான்காவது நாள் மேலும் அவசரச் சிகிச்சைகள் தேவைப்பட்ட காரணத்தால், அத்தியாவசிய சிகிச்சைகளுக்காக, உரிய சிகிச்சைக்காக நாகர்கோயில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கே சிகிச்சை பலன் அளிக்காமல்மரணம் அடைந்து விட்டார் என்றும் செய்தி வந்திருக்கிறது. பிரேத பரிசோதனையிலே அவர் மீது தாக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் எந்த அடிகளோ காயங்களோ இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்புகின்ற இந்தக் கோரிக்கை அந்த மாவட்டத்திலும்தொழிலாளர்கள் சார்பாக எழுப்பப்பட்டுள்ள காரணத்தினால் இது குறித்து ஒரு நீதி விசாரணை நடத்த மாவட்ட நீதிபதி அளவில் திரு. இராமமூர்த்திஅவர்கள்நியமனம் செய்யப்பட்டு, விசாரணை நடத்துமாறு உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, அந்தக் குடும்ப நிதிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரை கோரப்படும்.

(ஔ) கோவில்பட்டியையொட்டியுள்ள கிராமங்களை சங்கரன் கோவில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்த்தல்

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு வி யத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடந்த சட்ட மன்ற கூட்டத் தொடரின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்னாலே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் சொன்னார்கள்.